**செய்தி வெளியீடு எண்: 58/2022** **நாள்: 06.07.2022**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில்**
**மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்ற போக்குவரத்து வசதிகளை**
**சம்மந்தப்பட்ட அலுவலர்கள் உடனே முடிக்க வேண்டும்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரும்**
**முதன்மை செயலாளருமான மு.அ.சித்திக் உத்தரவு**

சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கென அனைத்து அடிப்படை வசதிகளையும் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இதில் பரங்கிமலை மெட்ரோ இரயில் நிலையத்தில் மாற்றுத்திறனாளிகள் எளிதாக சென்று வர ஏற்ற வகையில் நடைபாதை, கழிவறை போன்ற பல்வேறு வசதிகள் அமைக்கும் பணிகளை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரும் முதன்மை செயலாளருமான மு.அ.சித்திக் நேரடி கள ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது, மெட்ரோ இரயில் நிலையங்களுக்கு மாற்றுத்திறன் கொண்டவர்கள் சக மனிதர்களை போல வந்து செல்லும் வகையில் அவர்களுக்கு தேவையான வசதிகளை தொய்வின்றி விரைவாக செய்து முடிக்க வேண்டும் என்று சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரும் முதன்மை செயலாளருமான மு.அ.சித்திக் உத்தரவிட்டார்.

சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களை மாற்றுத்திறனாளிகள் எளிதாக அணுகும் வகையில் தேவையான சிறப்பு வசதிகள் அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெற்று வரும் பணிகளை சாய்தளப் பாதை கைப்பிடி, தொட்டுணரக்கூடிய பாதைகள், கழிப்பறை கைப்பிடி, எளிதில் நகர கூடிய தள்ளும் கதவுகள், குடிநீர் அருந்தும் இடம் மற்றும் பயணச்சீட்டு பெறும் இடம் அவர்களுக்கு எட்டக்கூடிய உயரத்தில் அமைத்தல், வாகன நிறுத்தும் இடம், மாற்றுத்திறனாளிகளுக்கான சக்கர நாற்காலி, மூன்று சக்கர சைக்கிள் போன்றவை எவ்வித தடுப்புமின்றி ஏற்றும் வகையிலான பாதை, இரயில் நிலையங்களில் அவர்களுக்கென்று அமருமிடம், வழிக்காட்டு பலகை போன்ற பணிகளை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரும் முதன்மை செயலாளருமான மு.அ.சித்திக் ஆய்வு மேற்கொண்டார்.

இதுகுறித்து முதன்மை செயலாளர் மு.அ.சித்திக் தெரிவித்ததாவது:

சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வழியில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்ற வகையில் நிர்ணயிக்கப்பட்ட அளவில் சாய்வு தள நடைபாதை இருக்க வேண்டும். அதேபோல் பார்வையற்றவர்கள் நடைபாதை தொடுணர்வு கொண்ட பாதையாகவும் வெளியேறும் மற்றும் உள்ளே செல்லும் வழியிலும் இருக்க வேண்டும். சக்கர நாற்காலி மற்றும் மூன்று சக்கர சைக்கிளில் வருவோருக்கு அதற்கு ஏற்ற வகையில் வழி இருக்க வேண்டும். கண் பார்வையற்றவர்கள் அவர்களுக்கென்று வழிகாட்டி ஊன்று கோல் பயன்படுத்தும் போது மெட்ரோ இரயில் நிலையங்களின் நடைபாதையில் அதிக இடைவெளி உள்ள மழைநீர் வடிகால் மூடிகள் இருப்பின் அவர்கள் பயன்படுத்தும் ஊன்றுகோல் வடிகால் மூடிகளின் இடைவெளியில் மாட்டிக் கொள்ளாத வகையில் அமைத்திட வேண்டும்.

மெட்ரோ இரயிலில் இருந்து இறங்கிய உடன் பார்வையற்றோர் எளிதில் அவர்கள் செல்லும் இடம் குறித்து பிரெய்லி எழுத்துகள் மின்தூக்கி அருகிலேயே கைப்பிடிகளில் இருக்க வேண்டும். அந்த கைப்பிடியில் எழுதப்பட்டிருக்கும் பிரெய்லி எழுத்துகள் மூலம் அவர்கள் வெளியில் செல்லக்கூடிய அனைத்து விவரங்களும் இருக்க வேண்டும். அதேபோல் வெளியில் இருந்து உள்ளே வருவதற்கும் நுழைவு வாயிலில் உள்ள சாய்தள பாதையில் உள்ள கைப்பிடிகளில் இதேபோன்ற பிரெய்லி எழுத்துகள் இருக்க வேண்டும்.

இது போன்று மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான உள்ளே, வெளியே செல்வதற்கு மற்றும் அனைத்து அடிப்படை வசதிகளை மெட்ரோ இரயில் நிலையங்களில் விரைவில் முடிக்கப்பட வேண்டும். இவ்வாறு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரும் முதன்மை செயலாளருமான மு.அ.சித்திக் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது முதன்மை செயலாளருடன், சென்னை மெட்ரோ இரயில் இயக்குநர் த. அர்ச்சுனன் (திட்டங்கள்), தலைமை பொது மேலாளர் லிவிங்ஸ்டோன் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு), இணை பொது மேலாளர் ராஜலட்சுமி (கட்டட வடிவமைப்பாளர்) மற்றும் பலர் இருந்தனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**